**செ.வெ.எண் - 14** **நாள்-16.11.2020**

# அரியலூர் மாவட்டம்

# அரியலூர் மற்றும் ஜெயங்கொண்டம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் 5 இலட்சத்து 11 ஆயிரத்து 627 வாக்காளர்கள் உள்ளனர் - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப., அவர்கள் தகவல்

அரியலூர் மாவட்டத்தில் உள்ள **149.**அரியலூர் சட்டமன்ற தொகுதி மற்றும் **150.**ஜெயங்டிகாண்டம் சட்டமன்ற தொகுதி ஆகியவற்றிற்கான வரைவு வாக்காளர் பட்டியலினை அங்கீகரிக்கப்பட்ட அரசியல்கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் இன்று **(16.11.2020)** வெளியிட்டார்கள்.

**இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது,**

**149.**அரியலூர் சட்டமன்ற தொகுதியில் **1,27,186** ஆண் வாக்காளர்களும், **1,27,370** பெண் வாக்காளர்களும், **4** இதர வாக்காளர்களும் மொத்தம் **2,54,560** வாக்காளர்கள் உள்ளனர். **150.**ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதியில் **1,27,621** ஆண் வாக்காளர்களும், **1,29,443** பெண் வாக்காளர்களும், **3** இதர வாக்காளர்களும் மொத்தம் **2,57,067** வாக்காளர்கள் உள்ளனர். இம்மாவட்டத்தில் **2,54,807** ஆண் வாக்காளர்களும், **2,56,813** பெண் வாக்காளர்களும், **7** இதர வாக்காளர்களும் ஆக மொத்தம் **5,11,627** வாக்காளர்கள் உள்ளனர்.

வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க திருத்தம்-**2021** பணிகள், **16.11.2020** முதல் **15.12.2020** முடிய நடைபெறுகிறது. அதுசமயம் 01.01.2021-ஐ தகுதி நாளாக கொண்டு 18 வயது நிரம்பிய நபர்களை வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதற்கும், மற்றும் வரைவு வாக்காளர் பட்டியலில் பெயர் நீக்கம், பெயர் திருத்தம் மற்றும் முகவரி மாற்றம் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு, விண்ணப்பங்கள் பெறப்பட உள்ளது.

மேலும் **21.11.2020, 22.11.2020, 12.12.2020** மற்றும் **13.12.2020** ஆகிய நான்கு தினங்களில் அந்தந்த பகுதியில் உள்ள வாக்குச்சாவடி மையத்தில் வாக்காளர் சிறப்பு முகாம் நடைபெற உள்ளது. இறுதி வாக்காளர் பட்டியல் **20.01.2021** அன்று வெளியிடப்படவுள்ளது.

எனவே, **18** வயது நிரம்பிய **(01.01.2003 அன்றோ அல்லது அதற்குமுன் பிறந்தவர்கள்)** தகுதியான நபர்கள் அனைவரும் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பதற்கும் மற்றும் வாக்காளர் பட்டியலில் திருத்தம், முகவரி மாற்றம் மற்றும் பெயர் நீக்கம் ஆகியவற்றிற்கு விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ஜெய்னுலாப்தீன், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) சு.சுந்தர்ராஜன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ரவிச்சந்திரன், வருவாய் கோட்டாட்சியர்கள் ஜோதி (அரியலூர்), பூங்கோதை (உடையார்பாளையம்), வட்டாட்சியர் (தேர்தல்) குமரய்யா, உட்பட அனைத்து கட்சி பிரமுகர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**